ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2229/5 - 2021 මැයි මස 25 වැනි අඟහරුවාදා - 2021.05.25

*2229/5 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

4 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் 2 ஆம் துணைப் பிரிவின் பந்தி (இ) மூலம் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் இலங்கையினுள் வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடல் வேண்டும் என்பதற்குட்பட்டு, இதன் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறான நோக்கங்களை, நியதிகளை அத்துடன் நிபந்தனைகளை விதித்துரைக்கின்றேன்.

2. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் (இதனகத்துப் பின்னர் "தாய்க் கம்பனி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வருவனவற்றுக்குட்பட்டு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் முன்கூட்டிய அனுமதியுடன் வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கின்ற இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அவற்றின் துணைக் கம்பனிகளுக்கு ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் கடன் வழங்குவதற்கு இத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளன.

(i) தாய்க் கம்பனியானது, 2021, பெப்புருவரி 03 ஆந் திகதியிடப்பட்ட 2213/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகளுக்கும் (இதனகத்துப் பின்னர் "2021 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க ஒழுங்குவிதிகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்துடன் இக்கட்டளையின் கீழ் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரிடமிருந்து தாய்க் கம்பனி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனொன்றின் கிடைப்பனவுகளிலிருந்து மாத்திரம் (இதனகத்துப் பின்னர் "வெளிநாட்டுக் கடன்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) துணைக் கம்பனிக்கு சொல்லப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனை (இதனகத்துப் பின்னர் "வெளிநாட்டு நாணயக் கடன்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வழங்குதல் வேண்டும்.

(ii) தாய்க் கம்பனியானது, துணைக் கம்பனிகளிடமிருந்து கிடைக்கப்பெறும் மேற்குறித்த அனுமதியின் கீழ் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களின் மீள்கொடுப்பனவுகளாக இருக்கின்ற வெளிநாட்டுச் செலாவணி உள்ளடங்கலாக கம்பனியின் வெளிநாட்டுச் செலாவணி உழைப்புகளிலிருந்து சொல்லப்பட்ட வெளிநாட்டுக் கடனின் மீள் கொடுப்பனவுகளைச் செலுத்தல் வேண்டும். சொல்லப்பட்ட வெளிநாட்டுக் கடனின் மீள் கொடுப்பனவுகளுக்கான ரூபா மாற்றல், மத்திய வங்கி மூலம் வழங்கப்படும் பணிப்புரைகளுக்குட்பட்டு இறுதி முயற்சியொன்றாக மாத்திரம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(iii) துணைக் கம்பனியினால் தாய்க் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன், மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட அனுமதிக்கமைவாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருடன் துணைக் கம்பனியினால் திறக்கப்பட்ட விசேட வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் சொல்லப்பட்ட கடனின் அனைத்து மீள் கொடுப்பனவுகளும் (முதன்மைத் தொகை மற்றும் வட்டி) அதே விசேட வெளிநாட்டு நாணயக் கணக்கினூடாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(iv) துணைக் கம்பனியானது, வாய்ப்புமிக்க எதிர்கால வெளிநாட்டுச் செலாவணி உழைப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், தாய்க் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சொல்லப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனின் அனைத்து மீள் கொடுப்பனவுகளும், துணைக் கம்பனியின் வெளிநாட்டுச் செலாவணி உழைப்புகளிலிருந்து மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.

(v) துணைக் கம்பனி, சொல்லப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனின் கிடைப்பனவுகளை அதன் வியாபாரத் தொழிற்பாடுகளுக்கு மாத்திரம் உபயோகிக்கலாம் (இலங்கைக்கு வெளியிலான ஏதேனும் மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலாக).

(vi) எந்தவொரு சூழ்நிலையின் கீழும் சொல்லப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனின் மீள்கொடுப்பனவுகள் (முதன்மைத் தொகை மற்றும் வட்டி) துணைக் கம்பனி மூலம் ரூபாக்களை வெளிநாட்டுச் செலாவணியாக மாற்றுவதன் மூலம் மேற்கொள்ளப்பட முடியாது.

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2021, மே 25.*

*06-228*